**தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்துதல் சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்துதல் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிபடபழராயத்திற்கான அடிப்படைப்பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து ஒழுங்குபடுத்துதல் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது முனைப்பழியுள்ள பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஒழுங்குபடுத்துதல் சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்தும் இயலுமையினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவம் ஒழுங்குபடுத்துதல் சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாகவிருந்தாலே தவிர தொடர்ச்சியாக செயற்படும் அடிப்படையில்கணக்கு வைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
ஒழுங்குபடுத்துதல் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக செயற்படுவதனை முடிவுறுத்தலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 2,117,565 பதிவுசெய்தல் கட்டண வருமானம் உறுதியாக அடையாளம் காணப்பட்டு கணக்குவைக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்படாத வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இச்சிக்கலினைத் தீர்த்துவைப்பதற்காக சபை கணக்கீட்டு மென்பொருளினையும் இணைய வழி பதிவுசெய்தல் முறைமையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. | பதிவுசெய்தல் கட்டண வருமானத்தை உறுதியாக அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது அட்டுறு செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 494,198 மொத்த பெறுமதியான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டிற்கான | ஒழுங்குபடுத்துதல் சபையின் செயலாளர் சேவைக்கான கொடுப்பனவு வேண்டுதல்கள் நீண்டகாலமாக | காலப்பகுதிக்குரிய செலவுகளை அடையாளங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அப்பணம் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கலின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கிடைக்காமையின் விளைவாக இந்நிலைமை உருவாகியுள்ளது. | |
| (இ) கணக்குகளை சமப்படுத்தாமையின் அடிப்படையில் உருவாகியிருந்த ரூபா 232,400 தொங்கல் மீதியை அடையாளங்கண்டு தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்குப் பதிலாக நிதிய மாற்றல் கணக்கின் மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. | அச்சிக்கலினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கின் மீதியை அடையாளங்கண்டு தேவையான செம்மையாக்கல் செய்தல் வேண்டும். |

**1.5.2 அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 48,438,734 மறைப்பெறுமதியாகக் காணப்பட்டதனால் ஒழுங்குபடுத்துதல் சபை குறுகிய காலத்தில் குழப்ப நிலையில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒழுங்குபடுத்துதல் சபை தொடர்ச்சியாக நட்டமடைவதன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 33,719,154 திரண்ட நிதியும் 2023 திசெம்பர் 31 அளவில் ரூபா 10,371,883 வரை 68 சதவீதத்தால் படிப்படியாக குறைவடைந்திருந்தது. | இந்நிலைமையை குறைப்பதற்கு மற்றும் வெற்றிகொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பதிவுசெய்தல் கட்டணத்தை 2024 ஆம் ஆண்டிலிருந்து 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு, தண்டம் மற்றும் தண்டக் கட்டணத்தை அமுல்ப்படுத்துவதற்கு, பதிவு செய்தலினை அதிகரிப்பதற்கு, அதிகாரச் சட்டத்தின் கீழ் உத்தரவுபெற்ற உத்தியோகத்தர்களின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதற்கு, மாகாண பணிப்பாளர்களினால் பதிவுசெய்யப்படாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை | நாட்டில் செயற்படுகின்ற அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்து வருமானங்களை அதிகரிப்பதற்கும் நிறுவனத்தின் செலவுகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து குழப்ப நிலையிலிருந்து விடுவிப்பதற்கும் தொடர்ச்சியாக நட்டமடைவதனை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுப்பதற்கு, இலத்திரனியல் பதிவுசெய்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் கிரயத்தை குறைப்பதற்காக முயற்சி எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். |

**1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை<br><br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பொருள் பதிவேட்டுப் பொருட்கள் | 3,255,035 | விபரமான பட்டோலை | 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களக்காக முறையாக ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து சரிசெய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | செலவுகள் | 2,826,544 | பணத்தை பொறுப்பேற்கும் பற்றுச்சீட:டுக்கள் அல்லது உரிய செலவுகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூல சான்று | உரிய செலவுப் பதிவேடு பரீட்சிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும். | இந்த அனைத்து தகவல்களையும் துரிதமாக கணக்காய்விற்காக சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய PED 04/2023 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | 2022 நிதி ஆண்டின் போது நட்ட நிலைமை அறிவிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு மிகையூதியம் செலுத்த முடியாத போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் ஒழுங்குபடுத்துதல் சபை 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 5,372,457 நட்டம் அடைந்திருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 525,000 மிகையூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ஒழுங்குபடுத்துதல் சபை ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் செயற்படுதல், ஊழியர்களின் முயற்சி மற்றும் விடுமுறையை குறைத்தல் என்பவற்றிற்காக மிகையூதியம் அங்கீகரிக்கப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செயற்பாட்டுக் கையோடு | | | |
| (i) 3.1 ஆம் பந்தி | ஆளணியினருக்காக பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்துதல் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதனை பொதுத் திறைசேரியில் பதிவுசெய்யாமைக்கு சபை எடுத்த கொள்கை ரீதியான தீர்மானமாகும். | செயற்பாட்டுக் கையோட்டில் காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 6.6 ஆம் பந்தி | கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கிய ஆண்டறிக்கையானது | 2023 ஆண்டறிக்கையினைத் தயாரிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டுக் கையேட்டில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதி ஆண்டு முடிவடைந்ததன் பின்னர் 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்துதல் சபையினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை 2024 மார்ச் 25 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | தந்திரோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், வருடாந்த பாதீடு என்பன தயாரிக்கப்பட்டு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் அவை வரிசை அமைச்சு செயலாளரினூடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து சரியான நடவடிக்கை எடுக்கப்படும். திறைசேரியில் பதிவுசெய்தல் சம்பந்தமாக தொடக்க கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. | வழிகாட்டிக் கோவையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (5) | குறித்த செயலுக்கான உப கட்டுநிதியானது அவை பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் 10 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் | எதிர்காலத்தில் இதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 3,529,800 குறித்த செலவுக்கான 53 உப கட்டுநிதிகளில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட ரூபா 1,060,300 தொகையான 11 உப கட்டுநிதிகளை தீர்த்துவைப்பதற்கு 10 நாட்களுக்கும் 25 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. இதில் 09 சந்தர்ப்பங்களில் செலவு செய்ததன் பின்னர் மிகுதிப் பணமானது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களில் 50 சதவீத்திற்கும் 89 சதவீத்திற்கும் இடைப்பட்டதாகும். மேலும் உரிய செயற்பாடு ஆரம்பிப்பதற்கு 5 நாட்களுக்கும் 36 நாட்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்னர் மொத்தமாக ரூபா 1,679,300 தொகையான குறித்த செயலுக்கான 23 உபகட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | இருப்பு மெய்மையாய்வு 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவி ல்லை. | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,504,684 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 5,372,457 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 6,877,141 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு பதிவுசெய்தல் வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் அதிகாரச் சட்டத்தின் 2(1) உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவுசெய்ய வேண்டியதுடன் பதிவுசெய்ய வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கு, பதிவுசெய்வதற்கு மற்றும் பதிவுசெய்யாத நிறுவனங்கள் சம்பந்தமாக அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு முறையான ஒரு நடைமுறை ஒழுங்குபடுத்துதல் சபையினால் தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தரவுத் தொகுதிகள் மற்றும் மீளாய்வினை அடிப்படையாகக்கொண்டு பதிவுசெய்யாத தனியார் மருத்துவ நிறுவனங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. பதிவுசெய்யப்படாத நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தும் கடிதங்களை அனுப்புதல், மூன்று மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தலினை வெளியிடுதல், பதிவுசெய்யாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட ஆலோசகருடன் கல்ந்துரையாடல், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரையும் வழக்கு தாக்கல் செய்யும் உத்தியோகத்தரையும் நியமித்தல் மற்றும் பதிவுசெய்யப்படாத நிறுவனங்களை அடையாளங் காண்பது சம்பந்தமாக பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடலினை நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சபையில் பதிவுசெய்யப்பட வேண்டிய மருத்துவ நிறுவனங்களை அடையாளங்காண்பதற்கும் பதிவுசெய்யப்படாத நிறுவனங்கள் சம்பந்தமாக அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கும் முறையான நடைமுறையினைத் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆலோசனையின் அடிப்படையில் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற கட்டளையின் மூலம் அமைச்சரினால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு | எதிர்காலத்தில் கவனித்துப்பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஒப்புதல் அளிக்கும் திட்டத்தினை படிப்படியாகக் காட்டி செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் ஒப்புதல் அளிப்பதற்கான வரையறைகள், கச்சிதமான வசதிகள், சேவைகள் மற்றும் ஏனைய எதாவது காரணிகளை உறுதியாகக் காட்டும் அனைத்து விபரங்களும் அக்கட்டளையில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் காட்டப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இந்த ஒப்புதல் அளிக்கும் நடவடிக்கை சம்பந்தமான கட்டளையைத் தயாரித்து ஒரு சட்டமாக மாற்றப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) அதிகார்ச் சட்டத்தின் 18(2)(எ) பிரிவின் பிரகாரம் ‘‘தொடர்பினைக் காட்டுகின்ற அல்லது அதிருப்திக்கு உள்ளாகியுள்ள ஒரு நபரினால் எதாவது ஒரு மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட ஒரு நபருக்கு எதிராக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதாவது ஒரு முறைப்பாட்டினைப் பொறுப்பேற்கும் போது மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக புறக்கணிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை அல்லது செயல்முறை’’ தொடர்பாக அமைச்சரினால் கட்டளை தயாரிக்கலாம் என்ற போதிலும் அமைச்சரினால் இந்த விடயம் சம்பந்தமாக கட்டளை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்துதல் சபையினால் PHSRC Guideline 05 - Complain Handling Procedure என்ற பெயரில் 2021 மார்ச் 19 | ஒழுங்குபடுத்துதல் சபையினால் முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைக்காக ஒரு வழிகாட்டிக் கோவையினைத் தயாரித்து கௌரவ சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந் திகதி 02 பக்கங்களைக் கொண்ட (12 விடயங்களை உள்ளடக்கிய) முறைப்பாடு சம்பந்தமான வழிகாட்டிக் கோவை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான வருமானத்தில் 2012 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான முன்னைய ஆண்டுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,078,250 அல்லது முழு வருமானத்தில் 13 சதவீதம் அளவான வருமானம் உள்ளடங்கியுள்ளது. வருடாந்தம் பதிவு செய்தலினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி அதிகாரச் சட்டத்தில் அல்லது முன்னோடி ஆலோசனையின் மூலம் குறிப்பிடப்பட்டிருக்காததன் காரணமாக மருத்துவ நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்காக ஏதாவது ஒரு திகதியில் அல்லது பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உரிய ஆண்டிற்காக பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தண்டப்பணம் அறவிடப்படாமையின் காரணமாக ஆண்டின் போது சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் தாமதமாக கிடைத்திருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் பதிவுசெய்வதற்கு ஒழுங்குபடுத்துதல் சபை பல முயற்சிகளை எடுத்துள்ளது. பதிவுசெய்யாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, தண்டம் மற்றும் தண்டக் கட்டணத்தை அமுல்ப்படுத்துவதற்கு மற்றும் இலத்திரனியல் பதிவுசெய்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தனியார் மருத்துவ நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்த மருத்துவர்களாக இருந்த போதிலும் தனியார் மருத்துவ நிறுவனங்களில் | இவ்விடயம் சபைக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி | தனியார் மருத்துவ நிறுவனங்களினால் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது ஆகக்குறைந்த தகமைகள் பின்பற்றப்படுகின்றது என்பதனை |

| | | | |
|---|---|---|---|
| | சேவையாற்றுகின்ற தாதி உப மருத்துவ மற்றும் நிறைவுகான் மருத்துவ சேவைகளுக்குரிய ஊழியர்கள் சம்பந்தமாக நியமங்கள் அல்லது வரையறைகள் ஒழுங்குபடுத்துதல் சபையினால் வெளியிடப்படவில்லை எனவும் இது சம்பந்தமாக தமது பொறுப்பினை நிறைவேற்றி இருக்கவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இச்சேவைகள் சம்பந்தமாக முறையான நியமங்கள் அல்லது வரையறைகள் அறிமுகப்படுத்தப்படாது மற்றும் இச்சேவைகளில் ஈடுபடுபட்டுள்ள ஊழியர்களின் தொழில் தகைமைகள் சம்பந்தமாக முறையான மதிப்பீடின்றி தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் ஒழுங்குபடுத்துதல் சபை பொறுப்புக்கு கட்டுப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | கொள்ளப்படுகின்றது. | உறுதிப்படுத்துதல் மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது ஆகக்குறைந்த நியமங்கள் பின்பற்றப்படுகின்றது என்பதற்கு பொறுப்புக்கூறுவதற்காக அதிகாரச் சட்டத்தின் மூலம் கிடைத்துள்ள ஒழுங்குபடுத்துதல் செயற்பாட்டினை முறைப்படியாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் ‘‘சபையினால் அத்தியவசியமானது என கருத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் சபையின் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், சபையின் எவராவது ஒரு அங்கத்தவருக்கு அல்லது அங்கத்தவர்களுக்கு அல்லது சபையின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு ஒப்படைக்கப்படும் அங்கத்தவர், அங்கத்தவர்கள் அல்லது குழுவினால் சபையின் சாதாரண பணிப்புரைக்கு மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அச்செயற்பாட்டினை மேற்கொள்ளல் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்படுதல் | பயிற்சிக் குழுவினால் முன்னாள் தாதிகள் பணிப்பாளர் உபகுழுவின் அவதானிப்பாளராக நியமிக்கப்பட்டதானது அவரின் விசேடத்துவ அறிவினைப் பெற்றுக்கொள்ளவதற்காக வாகும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டும்.“ எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கிணங்க குழுவிற்கு ஒழுங்குபடுத்துதல் சபையின் நிருவாக சபை அங்கத்தவர்கள் இல்லாத நபர்களை நியமிப்பதற்கு அதிகாரம் கிடைத்திருக்காத போதிலும் பயிற்சி உபகுழுவிற்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து ஒரு அவதானிப்பாளராக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | | |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்துதல் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்துவரும் சபைக் கூட்டத்தின் போது இப்பிரச்சினை சம்பந்தமாக கலந்துரையாடப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கணக்காய்வுக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதிய டீஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு காலாண்டிற்கு 01 வீதம் ஒரு ஆண்டிற்கு 04 கணக்காயவு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்துதல் சபையினால் மீாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை 2024 ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு "2030 நிகழ்ச்சிநிரல்" தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் சபையினால் தெரிந்து கொண்டிருக்காமையின் காரணமாக தமது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகள் சம்பந்தமாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய மைல்கற்களையும் இலக்குகள் மீதான அடைந்துகொள்ளலினை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலைமையானது கடந்த 06 ஆண்டுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்கள் அது சம்பந்தமாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு "2030 நிகழ்ச்சிநிரல்" தொடர்பாக ஒழுங்குபடுத்துதல் சபை தெரிந்துகொண்டு தமது நோக்கெல்லைக்கு கீழ் வருகின்ற செயற்பாடுகள் சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய மைல்கற்கள்ளையும் இலக்குகள் மீதான அடைதல்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |